# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 விடை (31-5-1988) ஓர் உருபா (இதழ் எண்: 105)


# உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ (வடிவேல் இராவணன்) திருச்சி, பொருளர் குழந்தை ஈகவரசன் சிறைப் படுத்தப் பட்டுள்ளனர்!

## பொழிலன் தேடப்படுகிறார்!

## தமிழ்நாடு முழுவதும் உள்ள தென்மொழி, தமிழ்நிலம் அன்பர்கள், முகவர்கள் ஆகியோரிடம் காவல் துறையின் கடுபிடிகள்!

### பாவலரேறு அவர்களிடம் நாள்தோறும் காவல்துறை உசாவல்கள்!

### அச்சுறுத்தலும், திடீர் ஆய்வுகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன!

### இயக்கத்தையே அடியோடு துடைத்தெரிய இராசீவ் அரசு உறுதிபூண்டு செயல்படுகிறது!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# ஆடம்பர - ஆரவார இராசீவ் 'சுல்தான்'!

உலகப் பொதுநல நாடுகளின் தலைவர்கள் மாநாடு சென்ற ஆண்டு இறுதியில் கனடா நாட்டில வான்கூவர் நகரில் நடந்தது.

இதில் இராசீவ் கலந்து கொள்ள உலகிலேயே மிக ஆடம்பர வசதிகள் கொண்ட 747 வகை வானூர்திகள் இரண்டு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. ஒன்று அவர் பயன்படுத்த. ஒன்று முன்னது பழுதுற்றால் உடனே பயன்படுத்திக் கொள்ள அணியமாக வைக்கப்பட்டது.

இத்தகைய வானூர்தியை அந்த மாநாட்டுக்கு வந்த உலகிலேயே கொழுத்த பணக்காரரான, புருணே நாட்டு 'சுல்தான்' மட்டுமே பயன்படுத்தினார். அவருக்கு நம் இராசீவ் இளைத்தவரில்லை என்பதை இவ் வேழை நாட்டுத் தலைமையமைச்சர் மெய்ப்பித்தார்.

இராசீவ் சென்ற இந்த வானூர்தியில் மிகச் சிறப்பான வசதிகள் செய்யப் பட்டிருந்தன.

குளிக்கும் வழலையி(சோப்பி) லிருந்து அவர் சாப்பிட்ட உணவுப் பொருள்கள் அனைத்துமே உலக நாடுகள் அனைத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற சிறந்த பொருள்களே! (Be Indian; Buy Indian — இந்தியப் பொருள்களையே வாங்குங்கள்; இந்தியராகவே இருங்கள் என்னும் சொலவகம் பொதுவான குடிமக்களாகிய நமக்கு மட்டுமே!)

அதிலிருந்த படுக்கைகள் இலண்டனில் செய்யப் பெற்றுப் பொருத்தப் பட்டவை.

துவட்டும் துண்டுகள் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப் பெற்றவை.

படுக்கை விரிப்புகள் உரோம் நாட்டிலிருந்து வாங்கப் பெற்றவை.

தலையணைகள் சுவட்சர்லாந்து நாட்டில் சிறப்பாகச் செய்யப் பெற்றவை.

அனைத்து வழலைகளும், மண நீர்களும், கழிவறை மணப் பொருள்களும் சிங்கப்பூரிலிருந்து வாங்கியவை.

இனிப்புகளும் பிற சிற்றுண்டி வகைகளும் சப்பான் நாட்டில் செய்யப் பெற்றவை.

வானூர்திக்குள் இராசீவுக்குச் செய்து தரப்பட வேண்டிய சிறப்பு வசதிகள் எவை எவை என்று அச்சிடப் பெற்ற விளக்கப் பொத்தகமே 16 பக்கங்கள் கொண்டதாகும்.

இப் பொத்தகப் படிகளைப் பம்பாய், புதுதில்லி, டோக்கியோ, பிராங்க்பர்ட் (செருமனி), வான்கூவர், பாசுடன், வாசிங்டன் வானூர்தி நிலையப் பணியாளர்களுக் கெல்லாம் அனுப்பப் பெற்றன.

இராசீவின் உணவு வகைகளோ இன்னும் சிறப்பான ஏற்பாடுகள் கொண்டவை.

மிக உயர்ந்த வெண்ணெய், கோக்கோ கட்டிகள் (சாக்லேட்டுகள்).

கொடுக்கப்படும் உணர்வு வகைக் குறிப்புகள் இராசீவுடன் செல்லும் அதிகாரிகளுக்கு மெல்லிய, வழவழப்பான, அழகிய தாள்களிலும், உயர் அதிகாரிகளுக்கு உயர் தர மெல்லிய பட்டுத்துணிகளிலும், இராசீவ் குடும்பத்தினருக்கு வெள்ளித் தகடுகளிலும் அச்சிடப் பெற்றிருந்தன.

(இவ்விடத்தில் மனு(அ)தர்ம நூலில், அணியப்படும் பூணூல் பிராமணர்களுக்கு பொன் இழைகளிலும், சத்திரியர்களுக்கு வெள்ளி இழையாலும், வைசியர்களுக்குப் பட்டு, பருத்தி நூல்களிலும், சூத்திரர்களுக்குச் சணப்பை நாரிலும் செய்யப் பட வேண்டும் என்னும் நெறி முறையை ஒப்பிட்டு நினைவு படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.)

இராசீவுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் மிகவுயர்ந்த மது வகைகளும், உலகின் மிகவுயர்ந்த கவண் சுருட்டுகளும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன.

அவருடன் சென்ற மதுக்குடிக்காத அதிகாரிகளுக் கென்று உயர்ந்த குளிர்குடிப்புகள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப் பெற்றிருந்தன.

(இந்தியாவில் செய்யப் பெற்ற எதுவும் இராசீவால் பயன்படுத்தப் படவில்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு அவற்றின் மேல் நம்பிக்கையில்லை போலும்!)

அவர்கள் பயன்படுத்திய மிசை விரிப்புகள் கூட பளபளவென்று மின்னுபவையாக இருந்தன.

இராசீவுடன் சென்ற செய்தியாளருக்கோ பொதுவான எளிமையான இடங்களும் பராமரிப்புகளுந்தாம் கிடைத்தன. ஆனால் அவருடன் சென்ற மற்றவர்களுக்கோ மிக முதன்மையான பெருமகர்க்குள்ள வகுப்பும் பராமரிப்பும் கிடைத்தன.

காலை உணவும், பகல் உணவும் அளவுக்கு மீறிய எண்ணிக்கையிலும் மிகவும் உயர்ந்தனவாகவும், விலை மிகுந்தனவாகவும் இருந்தன.

ஆக இந்த ஒரே வானூர்த்திச் செலவுக்காக மட்டும் உருபா 15 கோடிக்கு மேல் செலவானதாக இந்தியன் வானூர்தி அதிகாரிகள் கூறுகின்றனர்.

நாடு கடும் வறட்சியின் கொடுமைப் பிடியுள் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், தேவையற்ற செலவுகளைக் குறைக்குமாறு அரசுத்துறை அதிகாரிகளுக்கு அரசே — இராசீவே கட்டளையிட்டுள்ள இந் நிலையில், இராசீவின் இவ் வ〃 ருன

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

## அன்பர்களும் ஆதரவாளர்களும் அஞ்ச வேண்டாம்! பொறுத்திருந்து பார்ப்போம் பாவலரேறு விளக்கம்!

கடந்த மாதம் சென்னை, கத்திபாரா நேரு சிலை, கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் ஆகியவற்றைக் குண்டு வைத்துத் தகர்க்கும் முயற்சிகள் நடந்ததன் தொடர்பாக, உ. த. மு. க., தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றின் அன்பர்களிடமும், விற்பனை முகவர்களிடமும், நடுவண் ஒற்றுத்துறை, (C. B. C. I. D.) மாநில ஒற்று ஆய்வுத்துறை (S. B. C. I. D.) ஆகியவற்றின் மேனிலை அதிகாரிகள், ஆய்வர்கள் பரவலான, கடுமையான உசாவல்கள், ஆய்வுகள் இவற்றைக் கடந்த ஒரு மாதக் காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அவற்றுடன், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலர் திரு. **தென்னவன்கோ** (திருச்சி வானொலி செய்தி வாசிப்பாளர் வடிவேல் இராவணன்), திருச்சி மாவட்ட உ.த.மு.க. பொருளர் திரு. **குழந்தை ஈகவரசன்** ஆகிய இருவரும் மே மாதம் நடுப் பகுதியில் காவல் துறையால் தளைப்படுத்தப் பெற்றுச் சிறையில் வைக்கப் பெற்றுள்ளனர். மற்றும், மதுரை, திருச்சி, தஞ்சை, கோவை, நெல்லை, வடவார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ள தென்மொழி, தமிழ்நிலம் அன்பர்களும், உ.த.மு.க. ஈடுபாட்டாளர்களும் ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள், கடுமையான காவல்துறை ஆய்வுகளுக்கும் உசாவல்களுக்கும் உட்படுத்தப் பட்டுள்ளனர்.

பாவலரேறு அவர்களின் மகன் திரு. **பொழிலனும்**, அவருடைய நண்பர்கள் ஓரிருவரும் காவல் துறையால் கடுமையாகத் தேடப்பட்டு வருகிறார்கள். இரண்டு குண்டு வெடிப்புத் தொடர்பாக அவர்களுக்கும் ஏதோ ஒரு வகையில் ஈடுபாடு இருக்க வேண்டும் என்று காவல்துறை ஐயுறுவதாகத் தெரிகிறது. நிலை எவ்வாறாயினும் செய்தி முழுமையாக வெளிப்படும் பொழுது, பார்த்துக் கொள்ளலாம்.

ஆனால், இயல்பாக நடைபெற வேண்டிய இக் காவல் துறை ஆய்வுகளிலும், உசாவல்களிலும் ஆங்காங்குள்ள கவால் துறை அதிகாரிகள் சிலர், உசாவலுக்கு உட்பட்ட அன்பாகளிடம் ஏதோ அவர்களைக் கடுமையான குற்றவாளிகளாகக் கருதி மிகக் கொடுமையாகவும், தென்மொழி, தமிழ்நிலம் வாங்கிப் படிக்கக் கூடாது என்றும், அவற்றை வாங்கி விற்கக் கூடாது என்றும் மிரட்டலாகவும் நடந்து கொண்டதாக ஆங்காங்குச் செய்திகள் வந்தன; வந்தவாறு உள்ளன. அன்பர்கள் சிலரின் வீடுகளுக்குச் சென்று, குறிப்பிட்ட அவ் வன்பர்கள் இல்லாத பொழுது, அவர்கள் குடும்பத்தாரிடம் கடுபிடியாகவும் அச்சுறுத்தலாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்நிலையில் அவ்வன்பர்களின் பெற்றோர்களும், மனைவி மக்களும் பதறிப் போய் அரண்டு நிற்க, அவர்களிடம் 'இனிமேல் **தென்மொழி, தமிழ்நிலம்** வாங்கிப் படிக்கவோ, விற்கவோ, அவற்றின் ஆசிரியரிடமோ, அவர் இயக்கத்திடமோ தொடர்பு கொள்ளவோ கூடாது என்று உங்கள் மகன்களிடமும், கணவர்களிடமும் கூறுங்கள்' என்று அச்சுறுத்திக் கூறியிருக்கின்றனர். சிலர் வீடுகளில் வைத்திருந்த பழைய தென்மொழி, தமிழ்நிலம் படிகளையும் தொகுதியாக அள்ளிச் சென்றிருக்கின்றனர்.

இந் நடவடிக்கைகள் பற்றி ஆசிரியர் அவர்கள் சென்னையிலுள்ள, காவல் துறை மேலதிகாரிகளிடம் முறையிடு செய்த பொழுது, அவர்கள், **'இவ்வாறெல்லாம் தாறுமாறாகவும் அச்சுறுத்தலாகவும் நடந்து கொள்ள மேலிடத்திலிருந்து உத்தர விடப்படவில்லை'** என்றும், அவ்வாறு நடந்து கொண்டவர்களைக் கண்டித்தும், இனி அப்படி எங்கும் எவரிடமும் நடந்து கொள்ளக் கூடா தென்றும், உடனடித் தொலைவழிக் கட்டளை தரப் பட்டுள்ளதாகவும் விடை கூறினர்.

இதுபற்றிப் பாவலரேறு அவர்களிடம் நம் சிறப்புச் செய்தியாளர் கேட்ட பொழுது, அவர் கீழ்வருமாறு விளக்கம் அளித்தார்.

"கத்திபாரா நேரு சிலை, கொடைக்கானல் காட்சி நிலையம் ஆகியவை குண்டு வைத்துத் தகர்ப்பு முயற்சிகள் நம் இயக்கம (உ த மு.க.) சார்ந்தவை அல்ல. அவற்றிற்கும் நம் இயக்கத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நம் இயக்கம் அப்படி ஒரு கொள்கையையும் கொண்டிருக்கவில்லை. அல்லது அப்படி ஒரு செயலை இயக்கம் தீர்மானம் செய்து அன்பர்களுக்குத் தெரிவிக்கவும் இல்லை.

ஆனால் அந்நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சிலருடன், நம் இயக்க அன்பர்கள் ஓரிருவர் தொடர்பு கொண்டார்கள் என்னும் தாங்கள் கேள்விப்பட்ட செய்திகளையே அடிப்படைச் சாக்காக வைத்துக் கொண்டு, இயக்கத்தின் அடிப்படையான முயற்சிகளையே துடைத்தெடுத்து, இயக்கத்தையே அழித்தொழிக்கும் முயற்சியில் காவல்துறை நடவடிக்கைகள் எடுத்து வருவது, நடுவண் அரசின் கட்டளையாலோ, அல்லது இந்திராப் பேராரக்கட்சியின் இந் நாளைய தமிழ-

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

'நவசக்தி' காந்தா, உனக்கு மூளை இருக்கிறது ....
ஆனால், அடிமைவேலை செய்யவே அதனைப் பயன்படுத்துகிறாய்!

# ஈழச்சிக்கல் தமிழகத்தின் தேர்தல் சிக்கல் இல்லையா?

- "பாடலன்" -

தமிழகத்தில் நடக்கவிருக்கும் தேர்தலில் யார் வெற்றி பெற வேண்டும்? 'யார் வெற்றி பெற்றால் நாடு நலம் பெறும்' என்றெல்லாம் காற்றில் கோட்டைகட்ட விரும்பவில்லை.

ஆனால், இந்தியாவில்தான் தமிழகம் உள்ளது. அதுவும், பேராயக்கட்சியின் ஒருமைப்பாட்டில் தான் 'தமிழகம்' வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது உண்மையானால், ஈழச்சிக்கல், தமிழகத்தின் தேர்தல் சிக்கல்தான்!

இந்திய அரசு கேள்வி கேட்பாரின்றி ஈழச் சிக்கல் காரணமாகப் பல்லாயிரம் கோடி உருபாக்களை வீணடித்துக் கொண்டிருக்கிறது. தமிழகமக்களின் 'வரிப்பணமும்', அதில் அடங்கும் என்பதாலேயே, தமிழகத்தின் தேர்தலில் 'ஈழச்சிக்கலை' ஒரு சிக்கலாக்கிப் பார்ப்பது, தேர்தல்கட்சிகளுக்குள்ள உரிமையாகக் கொள்வதில், தவறில்லை என்றே கொள்ளலாம்!

"நமது அணுகுமுறையின் நோக்கம் அமைதியும் மக்கள் நாயகமும், ஒன்றுபட்ட இலங்கையும் ஆகும்" எனகிறார் 'நவசக்தி' காந்தன்;

"இலங்கையில் அமைதி.,"
"மக்கள் நாயகம்,"
"ஒன்றுபட்ட இலங்கை"

இவற்றைக் கேட்டால் அன்றாடம் செய்திபடிக்கும் சராசரி மாந்தனும் சிறுபிள்ளையும் நகைக்கும்!

கலைஞர் 'கூட்டணிக் கூடாரம்' அமைப்பதால், பேராயக் கட்சி வயிற்றில் அடித்துக் கொள்ளட்டும். இ. பொ. க, இ. பொ. க. (மா) கட்சிகள், ஈழச்சிக்கலைப் பொறுத்தவரை பேராயக் கட்சியின் அடிதாங்கிகளாகவே உள்ளன. அவரவர் விதைத்த விதைக்குரிய பயனை அறுவடை செய்வார்கள்!

நாம்., 'பாரில் பிறர்க்குழைத்து ஓயமாட்டோம்' என்ற பாரதியாரின் விடுதலைக்கருத்தைப் பேராயக்கட்சிக்காரர்கள் முழுமையாக விளங்கிக் கொள்ளமாட்டாமல், வெறும் அவரது,

"பாரதநாடு பார்க் கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர், இந் நினை வகற்றாதீர்"

பாட்டைப் பாடிக் கொட்டுக் கொட்டுவது பரிவுக்குரிய செயலேயாகும்.

தேன்தடவிய 'தோட்டா' — குண்டு!

அடிமைப் படுத்துகின்றவனின் நயவஞ்சம், இன் சொல், தடவிக் கொடுக்கும் தாராளம், மணி என்றும், 'புலி' என்றும் கூப்பிடும் குழைவு கண்டு 'நாய்கள்' மகிழலாம். நாம் தமிழர். அப்படி மகிழ முடியுமா?

'உள்துறை அமைச்சக வேண்டுகோள்' பற்றி 'நவசக்தி காந்தன்' எழுதியுள்ளதை நினைக்க 'நாயின் அடிமைப் பண்பே' வெளிச்சமாகியது. அதனை 'நன்றி' என்று பிறழவுணர்கின்றவர்களை நாம் எப்படிப் பாராட்டுதல் இயலும்?

"நடுவண் உள்துறை அமைச்சகம் உத்தரவு (Order) போடவில்லை, வேண்டுகோள் (An appeal) தான் விட்டுள்ளது" என்கிறார் 'நவசக்தி காந்தன்'!

"இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத்தான் — உயர்நிலை அதிகாரிகளுக்குத் தான் இந்த வேண்டுகோள்" என்கிறார் 'காந்தன்'!

உயர் அதிகாரிகள் இந்திக்காரர்கள் என்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்ளும் இந்த அடிமை, கீழறுப்புவேலை செய்வதில் வல்லவரே. அதனால் தான், 'பிறஇனத்தின்' 'தாய்மொழி உரிமை'க்குப் பாடுவது போலவும் பசப்புகிறார்.

தன்னைப் பெற்ற ஆத்தாளைக் கிண்ணியில் இரத்துண்டு வாழ விட்டு விட்டு, ஆளும் — வல்லாண்மை இந்திக்காரர்களுக்கு வாயாகிக் கிழிகிறார்!

அந்த 'வேண்டுகோள்' பயன்படுத்தலாம் (May be used) என்றிருப்பதால், 'நச்சினை உண்ணலாம்' என்று கூறும் நயம் கண்டு மகிழ்கிறார் இந்தக் காந்தன்?

இவர்கள் மதுவையும், வெண் சுருட்டையும் 'குடிகெடுக்கும், நலம் கெடுக்கும்' என்றறிந்தும் வணிகம் பண்ணத் தாராள உரிமை வழங்கிக் கொண்டிருப் பவர்கள்தாமே!

ஆகவேதான், தன்னின் அழிவின்மேல் தன்னலம் பெற விரும்புகின்ற தமிழகப் பேராயக் கட்சிக் காரர்களின் மூளையாக 'நவசக்தி' காந்தன் செயல்படுகிறார்!

'தேசியக் கடமை' என்று அடுத்து 'இந்தி' பரப்புவதற்கு ஆதரவாகப் பேசும் 'காந்தன்' பாரதியை மேற்கோள் காட்டுகின்றார்!

'செத்தும் கெடுத்தான் கதை'யாகப் பாரதியின் பழம் பாடல்களைப் பயன்படுத்துகிறார் 'காந்தன்'? காஞ்சி காசி உறவு, 'வெற்றிலை, பாக்கு'

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர் (3.)

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

## தில்லியரசின் கருவிப்பறிப்பு விளையாட்டும், பிளாட்-டின் சரிவும் உடைவும்:

ஏற்கெனவே தாம் கூறியவற்றை ஏற்க மறுத்த பிளாட் இயக்கத்தின் தலைவர்களை உளவுப் படை கொண்டு கொன்றொழித்த தில்லியரசு, அவ்வியக்கத்திற்காக வந்த படைக் கருவிகளைச் சென்னைத் துறைமுகத்திலேயே கைப்பற்றிக் கொண்டு, தனக்குப் பணியச் சொல்லி மிரட்டியது. வேறெதுவும் செய்ய இயலாத நிலையில் பிளாட் — தில்லியரசு தந்த குறைந்த அளவு கருவிகளுடனும், தில்லியரசு கொடுத்த திட்டத்துடனும் தமிழீழம் சென்றது. இதைப், புலிகள் இயக்கம் பிளாட் — டைத் தமிழீழக் கரையினிலேயே தடை செய்து, தமிழீழம் முழுவதும் பிளாட் — இயங்கக் கூடாது எனத் தடை செய்ததன் மூலம் முறியடித்தது. இந் நிலையில் ஒன்றும் செய்ய இயலாது பிளாட் தமிழகம் திரும்பியது. இதனால் வெறுப்பு அடைந்தி சிலர் பிளாட் — டை உடைத்துக் கொண்டு வெளியேறினர். எனவே பிளாட் இயக்கம் இரு குழுக்களாகப் பிரிந்தது. இதைச் செய்ததும் திலலியரசின் உளவுப் படையே ஆகும்.

இதன்வழி புலிகளுக்கு எதிரான மற்றோர் இயக்கமாக பிளாட் — டையும், அந்த பிளாட், இயக்கத்துக்கே எதிரியாக மற்றொரு பிளாட் குழுவையும் நிறுத்தியது தில்லியரசு. இ'து அத் தில்லியரசு, கண்ட பெரு வெற்றியாகும்.

இதன் விளைவாகத் தமிழீழத்தில் இயங்கி வந்த பெரிய இயக்கங்களில் இரண்டைப் புலிகளுக்கெதிராக நிறுத்தித் தடைப் படுத்தப்பட்ட இயக்கங்களாக மாற்றிவிட, தமிழீழத்தில் இ. பி. ஆர். எல். எப். ஈரோசு, போன்ற இயக்கங்களே இயங்கி வந்தன.

## பெங்களூர் பேச்சுரையும், தில்லியரசின் திருவிளையாடல்களும்!

இவ்வாறு இரு இயக்கங்களைத் தங்கள் கொள்கையிலிருந்து பிறழச்செய்த தில்லியரசு, இலங்கை அரசுடன் ஈழப் போராளிகளை மீண்டும் பேச வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. இதனால் பெங்களூரில் பேச்சுரை நடத்துவதென முடிவாகியது. ("சார்க்" (SAARC) மாநாடும் அங்கே நடைபெற்றது). இதிலும் போராளிகள் தில்லியரசு கூறும் திட்டங்களை ஏற்றுக் கொள்வதாக வாயுறுதியோ அல்லது எழுத்துறுதியோ தரவில்லை. இதனால் கடுஞ்சினமுற்ற தில்லி இந்தி(ய) அரசு போராளிகளை அடி பணிய வைக்க வேண்டும் எனக் கருதித் தமிழகத்தில் தனது பாதந்தாங்கியாக இருந்த அண்ணா திராவிட அ. இ. அ. தி. மு. க. அரசை ஏவி விட்டு, வேறெந்தக் கட்சிகளின் ஆதரவுமற்று இருந்த இ. பி.. ஆர். எல். எப்., இயக்கத்துடன் அ. தி. மு. க. குண்டர்களை மோதவிட்டது. இதே போன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் திட்டமிட்ட மோதல்களை உருவாக்கிவிட்டது. இதன் வழி ஒரு கலகத்தை அத்தில்லியரசு தமிழகத்தில் விளைத்தெடுத்தது. இதன் மூலம் ஈழப் போராளிகள் தமிழகத்தில் கருவிகளை ஏந்திக் கொண்டு மக்கள் எதிர்ப்பு வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் எனப் பரப்பல் செய்து, அதையே கரணியங்காட்டிப் போராளிகளிடமிருந்து தொலைத் தொடர்புக் கருவிகளையும், படைக் கருவிகளையும் பறித்தெடுத்தது. இச் செயலின் விளைவாக வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டி, இ. பி. ஆர். எல். எப். இயக்கத்தின் அலுவலகத்தை மூடி முத்திரையிட்டது. இந்நிகழ்வுகளினால் தமிழக மக்களிடையே இருந்த தமிழீழ விடுதலை ஆதரவு உணர்வு ஈழப்போராளிகளுக்கெதிரான எதிர்ப்புணர்வாக மாற்றப்பட்டது. இதுவும் இந்தி(ய)த் தில்லியரசு கண்ட வெற்றிகளுள் ஒன்றாகும்.

கருவிப் பறித்தலைக் கண்டித்துப் புலிகள் இயக்கம் இறக்கும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டத்தை அறிவித்துப் போராட்டத்தில் இறங்கியது. உடனே நடுவண் அரசுக்குத் தெரியாமல் தமிழக (மாநில) அரசே இதைச் செய்து விட்டது என மழுப்பிப் பறித்தெடுக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கருவிகளில் சில புலிகளுக்கு மட்டும் திருப்பியளிக்கப்பட்டன.

## இ.பி.ஆர்.எல்.எப். - இன் கையறு நிலையும், ஈழ விடுதலைப் போராட்டமும்:

இ. பி. ஆர். எல். எப். இயக்கம் தில்லியரசினால் இயங்காது தடுக்கப்பட்ட பின், தமிழீழத்தில் அது கருவிகளற்ற நிலையில் செயல்பட இயலாத இயக்கமாக நின்றது. இந்நிலையில் தமிழீழத்தில் இயங்கும் பெரும் இயக்கங்களாகப் புலிகளும், ஈரோசும் மட்டுமே இயங்கின. இதிலும் வலிமை மிகுந்த இயக்கமாகப் புலிகள் இயக்கமே

Scanned with CamScanner

இருந்து வந்தது. இதனால் கருவிகளற்ற நிலையில் இருந்த இ. பி. ஆர். எல். எப். இயக்கம் தமது கருவிகளைத் திருப்பியளித்து உதவுமாறு தில்லியரசின் காலடியில் மண்டியிட்டுக் கோரிக்கை விட்டது.

இதை எதிர்ப்பார்த்திருந்த தில்லியரசு புலிகளை அழித்தால் கருவிகளையளித்து உதவுகிறேன் என்று ஆளுமையைக் காட்டியது. வேறெதுவும் செய்ய இயலாத நிலையில் இ. பி ஆர். எல் எப். உம் அக்கட்டுப்பாடுகளை ஏற்றுப் புலிகளுக்கெதிரான இயக்கமாகக் கருவிகளைப் பெற்றுக் கொண்டு தமிழீழத்தில் செயல்படத் தொடங்கியது. சில நாள்கள் சென்று புலிகளுக்கெதிராக ஒரு போரைக் கட்டவிழ்த்து விட்டது. ஆனால் அப்போர் புலிகளினால் உடைத்தெறியப் பட்டது.

இதன் மூலம் தோல்வியை ஈட்டிய இ பி. ஆர். எல். எப். இயக்கம் இலங்கைப் படைகளை அழைத்துச் சென்று புலிகளின் தாவடி (முகாம்) களைக் காட்டிக் கொடுத்து அழிக்கும் செயல்களில் ஈடுபட்டது. எனவே புலிகள் இயக்கம் இ. பி. ஆர். எல். எப். — ஐத் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்து, அஃது இனி இயங்கக் கூடாது எனவும் அறிவித்தது.

தில்லியரசின் திட்டமிட்ட சூழ்ச்சிகளால் ஈழப் போராளிகளே ஒருவருக்கொருவர் எதிரிகளாய் மாறித் தமது பொது எதிரியாகிய இலங்கை அரசிடமே பணிந்து ஈழ விடுதலையைத் தடுக்கும் அளவுக்கு ஈழ விடுதலைப் போராட்டம் தடுமாற்ற முறத் தொடங்கியது.

புலிகள் இ. பி. ஆர். எல். எப். ஐத் தடை செய்ததன் மூலம் தில்லியரசின் புலிகளை அழிக்கும் சூழ்ச்சி தோல்வியை அடைந்தாலும், புலிகளுக்கெதிராக மூன்றும் எதிரியாக இ. பி. ஆர். எல். எப். ஐ நிறுத்துகிற சூழ்ச்சி வெற்றி பெற்றது.

## போராளிகளின் ஒன்றிணைவும் இந்தி(ய) வல்லரசின் இழி திட்டமும்:

தில்லி இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிவலைகளை உணர்ந்த ஈரோசு (E. R. O. S.) இயக்கம், இதனால் இ பி. ஆர். எல் எப். — உடன் தான் கொண்டிருந்த உறவுகளை முறித்துக் கொண்டு, தில்லியரசின் சூழ்ச்சிகளைக் காலத்தே வெட்டியெறிந்து வந்த புலிகளுடன் இணைந்து போரிடுவதாக அறிவித்தது.

இந்நிலையில் தான், ஏற்கெனவே புலிகளுக்கெதிரியாகத் திருப்பப்பட்டிருந்த பிளாட் — இயக்கத்தினை மீண்டும் புலிகளை அழிக்கப் பயன்படுத்தத் தில்லியரசு திட்டம் தீட்டியது. ஆனால் பிளாட் — டின் சில தலைவர்கள் அதற்கு உடன்படவில்லை. எனவே மீண்டும் அவர்களைக் கொன்றொழிக்கும் செயல்களில் இந்திய உளவுப் படை ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டது. அவை தற்செயல் உந்து நேர்ச்சிகள் (விபத்துக்கள்) போல் நடந்தேறின. கொலை வெறி கொண்ட தில்லியரசு பிளாட் — டின் தலைவராக இருந்த முகுந்தனையும் கொலத் திட்டம் தீட்டியது. (அது திருச்சி மாவட்டத்தில் பாடாலூர் — சிறுகனூருக்கிடையே நடந்த உந்து நேர்ச்சியாக முடிந்தது). ஆனால் அதிலிருந்து முகுந்தன் தப்பி விட்டார். அவருடன் இருந்தவர்களில் சிலர் கொன்றொழிக்கப் பட்டனர் இதனை உணர்ந்த முகுந்தன் தில்லி சென்று தன் உயிருக்காக இந்தி(ய) அரசு தரும் எந்தத் தீர்வையும் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறி மண்டியிட்டார். இந்தி(ய)த் தில்லியரசு அதனை ஏற்றுக் கொன்றொழிக்கும் திட்டத்தைக் கைவிட்டது.

எனினும் பிளாட் — தான் கூறியதிலிருந்து மாறுபடுமேயானால், அதனை அழிக்க பிளாட் — டின் எதிரியாகிய மற்றொரு பிளாட் குழுவைப் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுத்தது.

## தில்லியரசின் சார்பு இயக்கங்களும், தமிழீழ விடுதலைப் போராட்டமும்:

இதற்காகத் தில்லியரசு புலிகளால், தனது சூழ்ச்சிகளால் தடை செய்யப்பட்டுப் புலிகளை எதிரிகளாகக் கருதிக் கொண்டு தமிழகத்தில் நின்றிருந்த டெலோ, பிளாட், இ. பி. ஆர். எல். எப், போன்ற இயக்கங்களை இணைத்து மூன்று விண்மீன் குழு (Action Three Star) எனும் பெயரில் ஒரு புலிகள் எதிர்ப்பு முன்னணியையும், இம் மூன்று விண்மீன் குழுவே இந்தி(ய) அரசுக்கு எதிராகச் செயல்படுமேயானால் அதனை யொழிக்க பிளாட் — டிலிருந்து பிரிந்த மற்றொரு பிளாட் குழுவையும், இ. பி ஆர். எல். எப் — இலிருந்து பிரிந்த மற்றொரு இ. பி. ஆர். எல். எப். குழுவையும், அவர்களுக்குத் தாங்கள் பிரிந்து வந்த இயக்கங்கள் மீது இருந்த வெறுப்பையே அடிப்படையாகக் கொண்டு, "ஈழ தேசியக் குடிநாயக விடுதலை முன்னணி" எனும் பெயரில் ஓர் அமைப்பையும், உருவாக்கித் தமக்கு சார்பான விடுதலை அமைப்புகளாக அவற்றை மாற்றியது.

இவ்விரண்டு அமைப்புகளும் தமிழகத்தில் புலிகளுக்கெதிரான பரப்பல் வேலைகளில் தில்லியரசால் ஈடுபடுத்தப்பட்டன. இவ்வாறு இரு சார்பு இயக்கங்களை உருவாக்கியதன் மூலம், தில்லியரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு திருப்பு முனைக்குக் கொண்டு வந்து விட்டதாகக் கருதியது. இந்த அளவுக்கு ஈழப்போராளிகள் இந்தி(ய) அரசுக்கு அடிபணிந்து இசைவாக நடக்க முடிவு எடுத்தனர் என்றால் அது தில்லியரசு பெற்ற பெரும் வெற்றியே ஆகும்.

(தொடரும்)

# தமிழீழ விடுதலை வெகு தொலைவில் இல்லை!

தஞ்சை -- நலங்கிள்ளி.

(கட்டுரையாசிரியர் தமிழகத்தில் பிறந்து தமிழகத்தில் வளர்ந்தவர்; தற்காலிகமாக அமெரிக்காவில் வாழ்கிறார்.)

## வரலாறு

ஏறத்தாழப் பதினைந்தாண்டுகளாகச் சிங்களப் படையுடன் தமிழீழ மறவர்கள் கருவிதாங்கிப் போர் நடத்தி வந்தனர். முதலில் ஆங்காங்கே சிங்களக் காவலர் குழுவினரிடமிருந்தும், படைத்துறையினரிடமிருந்தும் கைப்பற்றிய சிறு போர்க் கருவிகளையே (வேட்டகம் முதலியன) தமிழீழ மறவர்தம் தோள்கள் தாங்கின. காலம் போகப் போக, தமிழ் மறவரின் போர்த்திறத்தாலும், அரசியல் திறத்தாலும் வெளிநாட்டினரிடமிருந்து பெருங்கருவிகளையும் (விசைப்படகுகள், பெருவெடிகள் முதலியன) வாங்கினர். தமிழீழ மறவரின் ஈகத்தின் (தியாகம்) விளைவாக யாழ்ப்பாணம் சிங்களவர் கையிலிருந்து தமிழர் கைக்கு மாறியது. (இருநூறாண்டுகட்குப் பின்னால், முதன் முதலாகத் தமிழீழத்தின் ஒருபகுதி தமிழரின் 'ஆட்சிக்கு'' மாறியது.) சிங்களப் படையினர் எத்துணையோ முயன்றும், வானிலிருந்து குண்டு மழை பொழிந்தும், பாகித்தானியப் படையினரும், இசுரேலிய உளவாளர்களும், ஆங்கிலேயக் கூலிப் படைகளும் சிங்களப் படைத்துறைக்குப் பல்வேறு உதவிகள் செய்தும், யாழ்ப்பாணத்தைத் தமிழ்ப் படையினரிடமிருந்து கைப்பற்ற முடியவில்லை. மேலும், தமிழீழ மறவர்கள் இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதிகளிலும் (திரிகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகள்) சிங்களப் படையினரையும், அவர்க்குத் துணை செய்த பிறநாட்டுப் படைவீரர்களையும் தாக்கத் தொடங்கினர். சிங்கள அரசின் பொருள்நிலை சீரழிந்து, சிங்கள அரசே ஏதிலி ஆகும் நிலையேற்பட்டது. தமிழீழ விடுதலை சில திங்களுக்குள் அல்லது ஓராண்டுக்குள் கிடைத்து விடும் என்ற நிலை ஏற்பட்டது. தமிழீழப் பொது மக்கள் எத்துணையோ துயர்களைத் தாங்கிக் கொண்டு தமிழீழ விடுதலையை நோக்கியிருந்தனர்.

''எங்கே தமிழர்களுக்கு ஒரு நாடு கிடைத்து விடுமோ?'' என நடு நடுங்கிப் போய்*, 1987 சூலைத் திங்களில் ஏதோ கண் துடைப்புக்காக இலங்கை — இந்திய ஒப்பந்தமொன்றில் கையெழுத் திட்டு விட்டு, அவ்வொப்பந்தத்துக்கு மறுத்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் தமிழ்த்திரு வே. பிரபாகரனையும், அவரின் வீரத்துணைவர்கள் சிலரையும் புதுதில்லி விடுதியொன்றில் சிறை வைத்து விட்டுத் தமிழீழப் புலிகளின் படைக்கருவிகளைக் கைப்பற்றும் படியாக இந்தியப் படையையும், கவச வண்டிகள் உட்பட பெரும் போர்க் கருவிகளையும் தமிழீழத்துக்கு அனுப்பிவைத்தது இந்திய அரசு. சிறைப் பட்டாலும் புலி பூனையாகாது என்னுமாப் போல், பிரபாகரன் இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கு ஒப்ப மறுத்தார். தமிழீழப் பொது மக்கள் அவரை விடுதலை செய்யும் படி குரலெழுப்பினர். என்ன செய்வதெனத் தெரியாது விழித்த இந்திய அரசின் தலைமையமைச்சர் இராசீவ் பிரபாகரனை விடுவித்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் ஏறத்தாழ காற்பகுதிப் படைக் கருவிகளை இந்தியப் படையினரிடம் ஒப்புவித்தனர். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் **தமிழரை என்றென்றும் சிங்களவருக்கு அடிமை யாக்கிவிடும்**. இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கு இணங்க மறுத்தனர்.

இந்நிலையில், தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர் பெருமளவில் குடியேற்றப்படுவதைக் கண்டும் கண் மூடிக் கொண்டது இந்திய அரசு. நெறிமுறையில்லாமல் சிங்கள அரசால் பலகாலமாக (ஆண்டுக் கணக்கில்) சிறை வைக்கப்பட்டிருந்த தமிழர்களில் ஏறத்தாழப் பாதிப்பேரை விடுவிக்க சிங்கள அரசு மறுத்தது. இந்திய அரசு இது குறித்து ஏதும் செய்யவில்லை. தமிழ்ப் பகுதிகளில் காவலர்களை அமர்த்தும் உரிமை தமிழர்க்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு சிங்கள அரசு செவி சாய்க்கவில்லை. இந்திய அரசும் வாளாவிருந்தது. இந்நிலைகளை எதிர்த்துத் தமிழ்ப் புலிகளின் வீரர்களிலொருவரான திலீபன் உண்ணாநோன்பு நோற்றார், இந்தியப் பன்னவர் (தூதர்) தீட்சித் அவரைப் பார்த்துப் பேசவும் மறுத்தார். திலீபன் பட்டினியிருந்தே இறந்து மாளாப் புகழெய்தினார்.

இந்நிலை இவ்வாறிருக்க, 1987 அக்டோபர்த் திங்களில், சிங்களக் கடற்படையினர் தமிழ்ப்புலித் தளபதிகள் **குமரப்பன்** (யாழ்ப்பாணத் தளபதி), **புலேந்திரன்** (திரிகோணமலைத் தளபதி). உட்பட 17 தமிழீழப்புலிகளை எக்காரணமுமின்றியும் தளை செய்து கொழும்புக்குக் கொண்டு செல்லவிருந்தனர். இந்தியப் படையினரின் படைத்தளத்திலேயே இவர்கள் காவல் வைக்கப்பட்டிருந்தும், எக்குற்றமும் செய்யாத (தமிழீழ விடுதலைப

* இதை நாமாகக் கூறவில்லை. **''இலங்கைத் தீவில் தமிழர்க்கெனத் தனியாக ஒரு நாடு அமைவதை அனுமதிக்க மாட்டோம்''** என இராசீவ் காந்தியும், அவருடைய அமைச்சர்களும், நூறு முறையாவது கூறியிருப்பர். பழைய செய்தித் தாளிகைகளைப் படித்துப் பாருங்கள்.

போரையே குற்றமென சிங்களவரசு கருதினாலும், அக்குற்றங்கள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் படி மன்னிக்கப்பட்டு விட்டன) இப்பதினேழு மறவர்களையும் கொழும்புக்கனுப்பி வைக்க இந்திய அரசு சம்மதித்தது. எந்நிலையிலும், தங்களின் படைக் கமுக்கங்களை (இரகசியங்கள்) பகைவனுக்குத் தெரிவிக்கலாகாது என்ற நோக்குடன், இவ் வீரர்கள் "சயனைடு" நஞ்சுண்டனர். 12 பேர் உடனடியாக உயிர்த்துறந்து வீரத்துறக்க மெய்தினர்.

இவ்வாறு எல்லா வகையிலும் தமிழர் நலம் மறுக்கப்படுவதையும், இந்திய — இலங்கை ஒப்பந்தப்படி தமிழினம் மீண்டும் முழுமையாகச் சிங்களவருக்கு அடிமையாக்கப் படுவதையும், தம்முடைய வீரர்கள் எக் காரணியுமின்றித் தளை செய்யப்படுவதையும் கண்டு, இனியும் வாளாவிருப்பது முற்றிலும் தவறு எனக் கண்ட பிரபாகரனும், அவருடைய தளபதிகளும், வீரர்களும் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட முடிவெடுத்தனர்.

பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளைப் "போருக்கு" அணியமாகும் படி பணிந்தார். இது கண்ட இந்திய அரசு, ஏறத்தாழ 30,000 பேர் கொண்ட படைப்பகுதியுடன் யாழ்ப்பாண நகரைத் தாக்கியது. பலத்த போர்க் கருவிகளும், நாசகார வெடிகளும் கவச வண்டிகளும், குண்டு பொழிந்த வானூர்திகளும், வானிலிருந்தே மக்களைச் சுட்டுக் கொல்லும் திருகிறக்கை (Helicoptors) ஊர்திகளும் இத் தாக்குதலில் பயன் படுத்தப்பட்டன. முப்பதினாயிரம் பேர்கொண்ட இப் பெரும் படையினுக் கெதிராக ஏறத்தாழ இரண்டேவாயிரம் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் காத்து நின்றனர். ***"சில நாள்களில் பிரபாகரனைத் தளை செய்வோம், ஈழப்புலிகளை முற்றிலுமாக ஒழிப்போம், யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவோம்"*** என இந்தியப் படைத்தலைவர்கள் கெக்கெலி செய்தனர். ஆனால் நடந்ததோ வேறு. தமிழீழ விடுதலைப் புலிகளின போர்த்திறனும், அஞ்சாமையும் இந்தியப் படையைத் திணற வைத்தது. தமிழீழப் புலிகளின் அஞ்சாமையையும், ஆற்றலையும், நாட்டுப் பற்றையும் கண்டு அனைத்துலகுமே வியந்தது. வெளிநாட்டுத் தாளிகைகள் அவர்தம் வீரச் செயல்களை உலகுக்கு வெளிப்படுத்தின. இந்தியப் படை எதிர்பார்த்ததற்கு மாறாக, பல நூறு இந்தியப் படையாளர்கள் போரில் மாண்டனர். நூற்றுக் கணக்கில் ஈழப் புலிகளும் வீரத்துறக்கம் எய்தினர். "வாழ்ந்தாலும் தமிழ் வாழ வாழ்வோம் நாங்கள், வீழ்ந்தாலும் தமிழ்வாழ வீழ்வோம் நாங்கள்" என்னுமாப் போல், ஈழப் புலிகள் எந்நிலையிலும் இந்தியப் படையினருக்கு அடிபணியாமல் போர்முனையில் வீழ்ந்து வரலாறு படைத்தனர். பல நூற்றுக் கணக்கான தமிழ்ப்பொது மக்கள் இந்தியாவின் நாசக்கார வெடிகட்கும், வான்குண்டு வீச்சுகட்கும் இரையாயினர். அது மட்டுமல்லாமல், எந்த வகை இரக்கமுமில்லாமல், விலங்கினமும் வெட்கும் வகையில் இந்தியப் படையாளர்கள் தமிழ்ப் பொதுமக்களை வீடுகளிலும் சுட்டுக் கொன்றனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் இந்தியப்படைக் காட்டுமிராண்டிகளின் காம வெறிக்குப் பலியாயினர். சில வேளைகளில் கற்பழிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களை அங்கேயே சுட்டுக் கொன்றனர். இந்தியப் படையாளர்களெனவும் கேள்விப்பட்டோம். இந்திய அரசு நடத்துகின்ற வானொளியும், வானொலியும், தனியார் நடத்துகின்ற சில பல இந்தியத் தாளிகைகளும் இந்தியப் படையின் ஈவிரக்கமற்ற, காட்டுமிராண்டித் தனமான போர் முறைகளையும் அதனாலேற்பட்ட தமிழ்ப்பொது மக்களின் உயிரிழப்புகளையும் மூடி மறைத்துப், பொய்ச் செய்திகளையே வெளியிட்டன. ஆனால் வெளி நாட்டு (அமெரிக்க, ஐரோப்பிய), நடு நிலைத் தாளிகையாளர்கள் உண்மையான செய்திகளை வெளியிட்டு இந்தியப் படையின் கொடுமைகளை மட்டுமல்லாமல், கையாலாகாத்தனத்தையும் உலகுக்கு வெளிப்படுத்தினர்.

பிரபாகரனின் நெஞ்சுரத்தையும், நாட்டுப்பற்றின் ஆழத்தினையும, விடா முயற்சியினையும் வியந்து பாராட்டினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள், வீரர்களின் அஞ்சாமையையும், போர்த்திறனையும், நாட்டுப்பற்றினையும், இரண்டாயிரம் தமிழ்ப் புலிகள் முப்பதினாயிரம் பேரையும், பல நூறு மடங்குக்கும் அதிகமான போர்க் கருவிகளையும் கொண்ட இந்தியப் படையினை அதிகமான போர்க் கருவிகளையும் கொண்ட இந்தியப் படையிரை எதிர்த்து நின்று, ஏறத்தாழ ஒரு திங்களாக யாழ்ப்பாண நகரினைப் பாதுகாத்ததையும், இந்தியப் படைக்குப் பெருஞ் சேதம் விளைத்ததையும் கண்டு பன்னாட்டுப் படைத்துறைத் திறவோர்களும் வாய்பிளந்து நின்றனர். இத்துணை வீரம் படைத்ததா தமிழினம் என மேனாட்டு வரலாற்றாசிரியர்கள் கண் விழித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்தியத் — தமிழீழப் போர் தமிழினமே பெருமைப் படக் கூடிய வீரகாவியம். அப்போரில் உயிரிழந்த, உறுப்பிழந்த பன்னூறு தமிழீழப் புலிகட்காகவும், மற்றும் ஆயிரமாயிரம் தமிழ்ப்பொது மக்களுக்காகவும் குருதிக் கண்ணீர் விட்டாலும், அந்த வீர காவியத்தை எண்ணி நெஞ்சு பெருமிதம் கொள்ளவே செய்கிறது. ஆனால் தமிழகத்துத் தமிழர்களால், நாம் தமிழீழத்தைக் கைவிட்டுக், கைகட்டி நின்ற நிலையோ தமிழினம் என்றென்றும் நாணத்தக்கது. நடந்ததை எண்ணிப் பயனில்லை. இனியாவது தமிழீழப் புலிகட்கு முழுமையாகத் துணை

நின்று, நாம் செய்த கரிசினுக்குக் (பாவத்திற்கு) கழுவாய் தேடிக் சொள்வோமாக.

ஏறத்தாழ ஒரு திங்களுக்குப்பின், யாழ்ப்பாண நகர் இந்தியப் படையின் கைவயமாயிற்று. ஈழப் புலிகள், நகர்ப் புறங்களினின்று வெளியேறி, ஊர்ப்புறங்களிலும், காட்டுப் புறங்களிலும் பரவிப்போய் மறைமுகப் போருக்கு (கொரில்லப் போர்) அணிய மாயினர். யாழ்ப்பாணம், திரிகோணமலை, பத்திக் கோலாப் பகுதிகளில் வெற்றிகரமாக நடத்திய மறைமுகத் தாக்குதல்கள், மறைமுகப் போருக்கான அறிவுத் திறனும், வினைத் திறனும் தமிழீழப் புலிகளுக்கு உண்டென்பதை மெய்ப்பிக்கின்றன. இந்திய அரசும், அவர் தமைச்சார்ந்த சில பல தாளிகைகளும் பொய்ச் செய்திகளைப் பரப்பி வந்தாலும், தமிழீழப் பொதுமக்கள் தமிழீழப் புலிகளின் மேற்கொண்ட அன்பிலும், ஆதரவிலும் எவ் வகைக் குறைவு மில்லை யென்பதையும், தமிழீழப் பொதுமக்கள் தமிழீழ விடுதலையையே வேண்டுகிறார்களென்பதையும், ஐரோப்பிய, அமெரிக்கத் தாளிகைகளிலும் — சில இந்தியத் தாளிகைகளிலும் — அவ்வப்போது வரும் செய்திகள் வெள்ளிடைமலையாய் வெளிப்படுத்துகின்றன.

தமிழர் மற்றும் இந்தியத் தேசிய இனங்களின் வரிப் பணத்தின் மூலம். வெளி நாட்டிலும், உள்நாட்டிலும் கோடானு கோடிச் செலவில் வாங்கிய உயர்தரமான அழிப்புக் கருவிகளையும், பல இலக்கம் படையாளர்களையும் கொண்ட இந்திய அரசை (தில்லியரசை) சிலவாயிரம் வீரர்களும், ஆசிய, ஐரோப்பிய நாடுகளினின்று வாங்குவதும், உள் நாட்டிலேயே கமுக்கமாகச் செய்வதுமான பழைய, புதிய படைக்கருவிகளும் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள வெற்றி கண்டு தமிழீழ விடுதலை பெற முடியுமா என்ற கேள்வி தமிழகத் தமிழர் பலரிடையே எழுந்துள்ளது. இது, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் அண்மைக் காலத்து நடந்த விடுதலைப் போர்களின் வரலாறு தெரியாத அறியாமையின் பால் எழுந்த ஐயமேயாம். ஆனால் இவ்விடுதலைப் போராட்ட வரலாறுகளையும், அப் போர்களின் விளக்கங்களையும், மறைமுகப் போர் முறை நுணுக்கங்களையும் நன்கறிந்து கற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து இந்தியப் படைக்கெதிராக மறைமுகப் போர் நடத்தத் துணிந்துள்ளனர் தமிழீழப் பொதுமக்களும், எவ் வகைத் துயர்ப் பட்டாலும் தமிழீழம் பெற்றே தீர வேண்டுமென்று உறுதி கொண்டு தமிழீழப் புலிகட்குப் பலவாறு உதவிகள் செய்கிறார்கள்.

இக்கட்டத்தில், தமிழகத்துத் தமிழ் மக்கள், மறைமுகப் போர்களால் மாற்றாரின் பெரும் படைகளை மண்கவ்வ வைத்த விடுதலைப் போர்களைப் பற்றியறிவது நல்லது. இக்கட்டுரையில் வியத்நாமிய மக்கள் அமெரிக்கப் பெரும் கடைகளுக்கெதிராகப் போர் புரிந்து பெற்ற வெற்றியையும், ஆப்கானிய மக்கள் உருசியப் பெரும் படைகளுக்கெதிராக நடத்திவரும் போரையும் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுவோம்,

இந்தியப் படையினை விட அதிகமான ஆள் வலியினையும், பல நூறுமடங்கு படைக் கருவிகளையும் கொண்ட அமெரிக்கப் படையே, வியத்நாமியரின் மறைமுகப் போருக்கு முன்னிற்க முடியாமல் பின்வாங்கி அமெரிக்காவுக்குத் திரும்பியதென்றால், இந்தியப்படை தமிழீழத்தை எப்படி நிலையாக அடிமைப் படுத்தி விட முடியும்? இந்தியப் படையை விட ஆள் வலி, கருவிவலி, அரசியற் கட்டுக் கோப்புடைய உருசியப் படையே ஆப்கானியரின் மறைமுகப் போரினைத் தாங்கமாட்டாமல், இந்த ஆண்டிலேயே (1988) தங்கள் படைகளை உருசியாவுக்குப் பின்வாங்கிச் செல்ல முடிவு செய்து விட்டார்களென்றால், இந்தியப் படை தமிழீழ விடுதலைப் புலிகளை எப்படி ஒழித்துக் கட்ட முடியும்?

வியத்நாமிய விடுதலை வீரர்களோ, ஆப்கானிய விடுதலை வீரர்களோ, தமிழீழ விடுதலைப் புலிகளைவிட ஆற்றலிலோ, அறிவுத்திறனிலோ, போர் நுணுக்கங்களிலோ மேலானவர்களல்லர், இப்படிச் சொல்லுவதனால், நாம் வியத்நாமியரையோ, ஆப்கானியரையோ இழிவுபடுத்தவில்லை. அவர்கள் பெருவீரர்கள்தாம். அதேபோல நம் தமிழீழப் புலிகளும் மாமறவர்களே. தமிழகத் தமிழ் மககள் பிரபாகரன் மேலும், புலிகளின் தளபதிகள் மேலும், வீரர்கள் மேலும் முழு நம்பிக்கை வைத்து, அவர்கட்கு எல்லாவற்றானும் துணைநிற்க வேண்டும். தமிழன்பர்கள் இந்திய அரசு வெளியிடும் பொய்ச் செய்திகட்கும், அரசியல் சூழ்ச்சிகட்கும் மயங்காமல், உண்மை நிலைகளைத் தமிழ் நாடெங்கும் ஊர்ப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும பரப்ப வேண்டும்.

இந்திய அரசு உடனடியாகத் தனது படையைத் தமிழீழத்தினின்று வெளியகற்ற வேண்டுமென்று குரல கொடுக்க வேண்டும். இந்தியப் படை வெளியேறும் வரை குரல கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும். எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் இதில் பங்குபெற வேண்டும். தமிழுணர்வென்பது எந்தவோர் அரசியற்கட்சிக்கும் சொந்தமானதன்று. எல்லாக் கட்சியிலும் தமிழ்நெஞ்சுடையாருண்டு.

தமிழகமே! உன் சின்னத் தங்கையின் (தமிழீழ) மக்கள் வீர வரலாறு படைக்கின்றார்கள்! விடுதலைப் பாவியம் சமைக்கின்றார்கள்! உன் கண்களைத்திற! அவர்கட்குத் துணைநில்! இல்லாவிட்டால் வருங்காலம் நம்மை மன்னிக்காது!

வாழ்க தமிழீழம்! வெல்க விடுதலைப் புலிகள்!

Scanned with CamScanner

# இந்தியப் படை தமிழரைப்பற்றி என்ன நினைக்கிறது?

இதுவரையிலும் கமுக்கமாக (இரகசியமாக) வைக்கப்பட்டிருந்த இந்தியப் படைத்துறையினரின் மடல்கள் சிலவற்றை ஆங்கில இதழொன்று கண்டு பிடித்து வெளியாக்கியுள்ளது.

புதுதில்லியிலுள்ள இந்தியப் படைத் தளபதியொருவர் கூறுகிறார்! "இந்தியப் படை தென் ஆசியாவின் வருங்காலத்தையே மாற்றியமைக்கவுள்ளது. ஈழத் தமிழர்க்கெதிராகப் போர் நடத்துவது அழிவேற்படுத்தக் கூடியது தான். ஆனால் இந் நிலையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".

ஈழத் தமிழர்கள் செத்தாலென்ன, சீரழிந்தாலென்ன? அந்நிலைகளை இந்தியப் படை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாம்! இந்தியப் படைத் தளபதிகள் ஈவிரக்கமேதுமற்று இப்படி நினைப்பதால்தான் ஆயிரக்கணக்கான ஈழப்பொதுமக்கள் உயிரிழந்தனர்; உறுப்பிழந்தனர்; உயிரிழக்கின்றனர், உறுப்பிழக்கின்றனர். நூற்றுக் கணக்கான தமிழ்ப்பெண்டிர் கற்பழிக்கப்பட்டனர், கற்பழிக்கப்படுகின்றனர். இப்படியான ஒரு சூழலை 'இந்தி' மக்களிடையே செய்யத் துணியுமா இந்தியப் படை?

இந்தியப் படையின் கமுக்க மடலொன்று கூறுகிறது: "இப்போர் இந்தியாவுக்கு வெளியே நடப்பது நல்லதாய்ப் போயிற்று. இதைப்பற்றி இந்தியாவுக்குள்ளே தமிழ்நாடு மட்டுந்தான் எதிர்ப்புத் தெரிவிக்கும்." இந்தியப் படை தமிழ் நாட்டைப் பற்றி என்ன நினைக்கிறது. பார்த்தீர்களா? இந்த அடிமைப் பயல்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலென்ன? குட்டக் குட்ட குனிந்து கொடுக்கும் அடிமையினமாயிற்றேயிது! (1971 — இல், இந்திய — பாக்கித்தானியப் போரின் போது, மற்றெல்லா மாநிலங்களையும் விட அதிகமாக, தமிழ்நாடு பலகோடி உருபாக்களைத் திரட்டிக் கொடுத்தது. அதற்கு இந்தியப் படை செய்யும் கைம்மாறு இதுதான் போலும்!)

இந்தியப் படையின் மற்றொரு மடல் கூறுகிறது. "இந்தியப் படை அண்மைக் காலங்களில் வாங்கிய புதிய படைக் கருவிகள் பலவற்றை ஆய்வு செய்து பார்ப்பதற்கு இலங்கையில் நடத்துகின்ற இந்தப்போர் வாய்ப்பளித்தது."

மேலைநாடுகளில் புதிதாக உருவாக்கும் மருந்து வகைகளைச் சுண்டெலிகள், நாய்கள், குரங்குகளுக்குக் கொடுத்து அவற்றின் நன்மை, தீமைகளை ஆய்ந்தறிவார்கள். இங்கே, இந்தியப் படை ஈழத் தமிழர்களைச் சுண்டெலிகளாகவும், நாய்களாகவும், குரங்குகளாகவும் மதித்துத், தனது படைக்கருவிகளை அவர்கள்மேல் ஆய்ந்து பார்க்கிறது.

இக்கட்டுரையைப் படிக்கும் தமிழர் ஒவ்வொருவரும், இக்கட்டுரையைப் பற்றிக் குறைந்த அளவு பத்துப் பேருக்காவது எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழினம் முழுவதுமே இந்தியப்படை ஈழத் தமிழரைப்பற்றியும், தமிழ் நாட்டைப் பற்றியும் என்ன நினைக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழினமே! விழிதிற! விழித்தெழு! வெற்றி உனதே!

— தஞ்சை **நலங்கிள்ளி** (அமெரிக்கா)

---

## தமிழ் -- மலையாள இணைப்பு

'இந்தியா பல்வேறு கலையொழுக்கங்கள், மொழிகள் உள்ளடக்கிய ஒரு பெரிய நாடு. எனவே எல்லாக் கலையொழுக்க மக்களுக்கும், எல்லா மொழி பேசும் மக்களுக்கும் உரிய உரிமைகளை அவர்களுடைய தனித் தன்மையறிந்து தரவேண்டும். அத்தகைய ஆட்சியே நடுவணரசில் அமைந்திட வேண்டும்' என்றும், '1962-ஆம் ஆண்டு தி. மு. கழகம் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட பிறகு அதன் சட்ட திட்டக் கோட்பாடுகளை எழுதும் போது தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி பேசுவோரிடைக் கலையொழுக்கத் தொடர்பு உள்ளதை அடிப்படையில் கூட்டமைப்பாகப் பாடுபட வேண்டும்' என்றும் கலைஞர் கருணாநிதி சென்னையில் 18-5-88 அன்று தமிழ், மலையாளக் கலை, இலக்கிய அமைப்பைத் தொடங்கி வைக்கையில் பேசினார்.

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுகிற வேலையெல்லாம், அடிமை வாழ்வில் அமைநதுவிடும் என்று காந்தன், தாம் ஆதரவு காட்டும் சோவியத்து வழியிலிருந்து சான்று காட்டுவாரா?

"எழுத்து" கண்ணென்றான் வள்ளுவன். அதனால், இநதி, ஆங்கிலம். அனைத்து மொழி எழுத்துகளும் 'கண்தான்' என்கிற காந்தன் ஏன 'அனைத்து உலகியக் கட்சி' யிலிருந்து 'பாரதக் கட்சி'யில் கரைய விரும்புகிறார்!

தமிழ் எழுத்தே தெரியாத தமிழனை, வேறு மொழிகற்க வேண்டுகிறாரா? 'வீட்டுமொழி கற்காதவனை' விரட்டிய பாரதியை 'ஏந்தாக' மறந்து விட்ட காந்தனே, உன் இரண்டகம் 'விடியுமா' வரைதான்!

---

## கருப்புப் பணம்.

இன்றைய நிலையில் இந்தியாவில் புழங்கும் கருப்புப் பணம் 37000 கோடி.

—நடுவண் பொருள் அமைச்சர் வி. பி. சிங்.
24-6-85-இல் பாராளுமன்ற அறிக்கை.

Scanned with CamScanner

# அரசின் உசாவல் குழுக்கள் சட்டத்தை முதலில் திருத்த வேண்டும்!

"உசாவல் குழுச் சட்டப்படி" உசவல் குழுவை அறமன்றம் என்று கருதமுடியாது. ஆகவே அந்தக் குழுவுக்குத் தன்னை அவமதிப் போரைத் தண்டிக்கும் அதிகாரத்தை வழங்குவது வாழ்வியல் அடிப்படை உரிமைக்கு முரணாகும்.

இனி, நடுவண், மாநில அரசுகள் தங்களுடை அரசியல் நோக்கங்களுக்காகவே உசாவல் குழுக்களை அமைப்பது வழக்கமாக நடந்து வருகிறது.

தி. மு க. தமக்கு எதிராக இருந்த பொழுது, தி. மு. க. வின் தலைவர் கருணாநிதி பற்றி உசாவல் குழு ஒன்றை இந்திராகாந்தி அமைத்தார். பின்னர் கருணாநிதி அவரை ஆதரிக்கத் தீர்மானித்ததைத் தொடர்ந்து, இந்திராகாந்தி அக் குழுவை நீக்கி விட்டார்.

அதற்குப் பகரமாக, அ. தி மு. க. தம்மை எதிர்த்ததால் அதன் தலைவர் ம. கோ. இராமச்சந்திரனுக்கு எதிராக ஒரு குழுவை அமர்த்தினர், இந்திரா. பின்னர் அவர் தம்மை ஆதரிக்கத் தொடங்கியவுடன், அந்தக் குழுவையும காலத்தால் செயலிழக்கச் செய்தார்.

குடால் உசாவல் குழுவும் அரசியல் நோக்கங்களுக்காகவே அமைக்கப் பட்டது.

இத்தகைய குழுக்களில் பணிபுரியச் சம்மதிக்கும் அறமன்ற நடுவர்களும், அயசியல் அடக்கு முறைக்குத் தங்களைக் கருவிகளாகப் பயன்படுத்த அனுமதிக்கின்றனர்

இந் நிலைமையில் தங்களை அவமதிப்போரைத் தண்டிக்க இந்தக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்குவது கொடுமையானது என்பது தெளிவு

இந்த அதிகாரத்தை வழங்குவதனால், அரசியல் செயல்களுக்கு உசாவல் குழுக்களைத் தவறுகப் பயன்படுத்துவதை ஒழிக்கும் வரைக்கும், உசாவல் குழுச்சட்டத்தை முதலில் திருத்த வேண்டும். ஓர் அனைத்திந்திய 'அறமுறைக் குழுவை அமைத்து, அதன் ஏற்பிசைவு பெற்றபின்பே ஓர் உசாவல் குழுவை நடுவண் அல்லது மாநில அரசு அமைக்கலாம் எனறு ஏற்பாடு செய்ய வேண்டும். உசாவல் குழுவைத் தவறுகப் பயன்படுத்துவதை ஒழிக்கும் வரை, அரசியல் நோக்கம் கொண்ட எதிலும் உறுப்பாக இருப்பதற்கு உயர் நெறிமன்ற அல்லது உச்ச நெறிமன்ற நடுவர்கள் சம்மதிக்கக் கூடாது.

— வி. எம். தார்க்குண்டே.

முன்னாள் பம்பாய் உயரறமன்ற நடுவர் (குடியுரிமைகளின் காவலர் என்று பெயர் பெற்றவர்)

'தினமணி'க் கட்டுரை 8-2-88.

# இந்தியப் பணமுதலைகள்!

1986-ஆம் ஆண்டுக் கணக்குப்படி. நடுவண் தொழில் துறை அமைச்சர் வெங்களராவ் மாநிலங்கள் அவையில் கடந்த 11-5-88-இல் தெரிவித்த புள்ளி விளக்கங்கள்.

(கோடி மதிப்பில்)

| | | |
|---|---|---|
| 1. | பிர்லாவின் சொத்து மதிப்பு: | 4606.57 |
| 2. | டாடா. | 4348.94 |
| 3. | ரிலையன்சு | 2021.53 |
| 4. | சே. கே. சிங்கானியா. | 1229 94 |
| 5. | தாபர் நிறுவனம் | 1145.83 |
| 6. | மபத்லால் | 980.95 |
| 7 | மோடி | 860.56 |
| 8. | லார்சன் அண்ட். டுப்ரோ. | 830.56 |
| 9. | எம். ஏ. சிதம்பரம் | 807.39 |
| 10. | பசாச் (Bajaj) | 777.55 |
| 11. | ஏ. சி. சி. | 760.53 |
| 12. | பாங்குர் | 670.53 |
| 13. | வால்சந்த் | 629.14 |
| 14. | சிறிராம் | 572.33 |
| 15. | டி. வி. எசு. | 567.41 |
| 16. | ஐ. பி. சி. | 482.16 |
| 17. | கிர்லோசுகர் | 474 62 |
| 18. | இந்துசுத்தான் லீவர். | 469.26 |
| 19. | மகிந்திரா அண்ட மகிந்திரா. | 456.78 |
| 20 | ஐ. சி. ஐ. | 453.52 |

## இக்காலப் பிராமண இலக்கணம்.

'யார்க்கும் எதற்கும் காரணமில்லாமல் அஞ்சாதவனே ஓர் உண்மையான பிராமணன்' என்று பூரி சங்கராச்சாரி, ஐதராபாத் 'அனைத்திந்திய பிராமண மாநாட்டுக் கூட்டத்தில் இலக்கணம் கூறினர்.

அதே மாநாட்டில், காஞ்சி காமகோடி சயேந்திர சரசுவதி 'சதி' உடன் கட்டை பற்றிக் கருத்துக் கூறியதைப் பகடிசெய்தார். 'சந்நியாசத்தைத் துறந்த ஒருவர் எப்படி 'சதி' பற்றி சாத்திரங்களிலிருந்து விளக்கம் கூற முடியும்' என்று கேட்டார்.

(2-ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆடம்பர — ஆரவாரச் செலவுகள் கண்டிக்கத் தக்கனவாக உள்ளன. என்பதுடன், இவை குடி மக்கள் மீது தாங்க முடியாத சுமையை ஏற்படுத்துவதாகும் என்றும் சனதா கட்சியின் பொதுச் செயலாளர் செய்ப்பால் உள்பட எதிர்க் கட்சித் தலைவர்கள் — அரசியல் பார்வையாளர்கள் பலரும் கூறி வருந்துகின்றனர்; வெகுவாகக் கண்டிக்கின்றனர்.

0

# எரிமலை வெடிக்கும்!

பாவலர் - தமிழ்க்குமரன், ஈரோடு

தென்மொழி அறிஞர்க்குத் தீங்கு நினைத்துத்
தேரு மன்னன் போல்நீ இன்று
வன்முறை யாளரெனும் முத்திரை குத்தி
வளைத்துச் சிறையில் அடைக்கப் பார்க்கிறாய்!

அய்யாவுக் கேதும் ஊறு நேர்ந்தால்
அலைகடலாகப் பொங்கி யெழுவோம்!
பொய்யா வீரம் போற்றி நாங்கள்
புயலாய் எழுவோம்!! எரிமலை வெடிக்கும்!!!

எச்சரிக் கின்றோம் இராசீவ் உன்னை ;
எதற்கும் நாங்கள் அஞ்சிட மாட்டோம்!
துச்சம் உயிரெனத் துடித்தே எழுந்துன்
துடுக்கினை யடக்கித் தோற்றுவோம் நாடே!

தீமை சண்டு பொங்கா திருக்கத்
தென்மொழி பார்ப்பன ஏடிலை; கேளாய்!
ஊமைய ரல்லர் உணர்வரி மா, எம்
ஒப்பில் லாத பாவல ரேறே!

---

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத் தலைவர்களாலேயோ அல்லது அவர்கள் நேர்முக, மறைமுகத் தூண்டுதல்களாலோ தாம் நடந்திருத்தல் வேண்டும். இது மிகவும் கொடுமையானது, அடக்குமுறை சான்றது. இந்நிகழ்ச்சிகளை நாம் மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துடன் சென்னைக் காவல் துறை, ஒற்றுத் துறை ஆகியவற்றின் ஆய்வதிகாரிகளிடம் இது பற்றி வாய்வழியாக முறையீடும் செய்திருக்கிறோம். அவர்களும் இவ்வாறு நிகழாமலிருக்கப் போதுமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சொன்னார்கள் என்று கூறியதுடன் 'தென்மொழி, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் அன்பர்களும், முகவர்களும், இவைபற்றி யெல்லாம் துளியும் அஞ்சவேண்டுவதில்லை' என்றும் சொன்னார்கள்.

சில ஊர்களில் உள்ள தென்மொழி, தமிழ் நிலம் முகவர்கள் சிலரைக் காவலர்கள் அச்சுறுத்தியதால், அவர்கள் நீண்டகாலம் இப்பணியைத் — தொண்டைத் தொடர்ந்து செய்து வந்தவர்களாக இருந்தும் — காவல்துறை எங்கே தங்கள் மேலும் கடுமையான நடடிக்கை எடுத்துவிடப் போகின்றதோ என்று வெருவி — இனிமேல் தென்மொழி, தமிழ் நிலம் இதழ்களைத் தங்களுக்கு விற்பனைக்கு அனுப்ப வேண்டாம் என்றும் நமக்கு எழுதியுள்ளார்கள்.

ஆக, இராசீவ் அரசு காவல்துறையை ஏவி, அல்லது முடுக்கிவிட்டு, நம் இயக்கவுணர்வுகளையே அடியோடு துடைத்தெறிய முற்பட்டு விட்டது என்று உறுதியாக நாம் உணர்கிறோம் ; நம்புகிறோம். ஆனாலும் பொறுத்திருந்து பார்ப்போம். தேவையானால் பின்னர் தக்க நடவடிக்கை எடுப்போம். 0

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 23**

**விடுதலை உணர்வு எரிமலை போன்றது! அதிகார நீரைக் கொண்டு அதை அவித்து விட முடியாது!**

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 105.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5 : அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்:

திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657